# குருவை அறிய குருவை வேண்டல்

பூமிநாத ஸ்மாமிநாத வேணுகான தேவனே
என் யோகிராம் சுரத்குமார ப்ராணநாத ஈசனே

(பூமிநாத)

உன்னில் வந்து கேட்ப தொன்று
மெல்ல சொல்லவவோ

(பூமிநாத)

சிங்கம் போல பார்த்திடாது
சிநேகமான தோர்
புன்னகை நீ சிந்திட
என் யோக ராஜனே
பேச வேணும் கொஞ்சம் நேரம்
சலனம் தீரவே

(பூமிநாத)

கண்ணில்லாத நான்கு பேர்கள்
யானை பார்தல் போல்
என்னுள் உன்னைத் தேடித் தேடி
அயர்ச்சி யானதோ

உண்மையோ நீ நன்மையோ
என் ஆவித் தாங்குமோ
தீய கேள்வி என்னுள்
வந்து சாம்பராக்குதே

(பூமிநாத)

தீய கேள்வி மூலம் ஏது
நீயும் அல்லவோ
நீயிலாமல் என்னுள் ஏதும்
தோன்றலாகுமோ
ராமனே என் ரானே
என் ப்ராண ஸ்நேகனே
பேச்சுப் பிழைகள் பொறுக்க வேணும்
பேதை ஞானமே

(பூமிநாத)

போரில் கண்ணன் தேரை நிறுத்தி
கீதை பேசவே
முழுதும் கேட்டு முழித்த பார்தன்
எனது அண்ணனே
விழித்த போது கண்ணண் பொங்கி
விஸ்வ ரூபமே
காட்டினான் தனை நாட்டினான்
ஓர் கடவுளாகவே

(பூமிநாத)

உன்னை என்னுள் யானைபோல
காட்டலாகுமோ
குருடர் நால்வர் என்னுள் உண்டு
பேச்சு போகுமோ
காட்டுவாய் என் கண்ணனே
உன் விஸ்வரூபமே
தாங்குமாறு வலிவு ஏற்று
கேள்வி போகுமே

(பூமிநாத)